Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 29 15-11-94 செவ்வாய்க்கிழமை ஓசை 270

## நான்கு ஒலி, ஒளி நாடாக்கள் நாளை வெளியிடப்படுகின்றன

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் இரு வீடியோ ஒளிப்பட நாடாக்கள் மற்றும் கடற்புலிகளின் இரு பாடல் ஒலிப்பதிவு நாடாக்களினதும் வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 4 மணிக்கு யாழ்: இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவான ந. கேசவராஜனின் 'பிஞ்சு மனம்' மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுக் கழ (6-ம் பக்கம் பார்க்க)

# சந்திரிகா அரசிற்கு நல்லெண்ண சமிக்கை; தலைவரால் ஒருவாரம் போர் இடை நிறுத்தம்

## சகல படைப் பிரிவுகளுக்கும் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அரசாங்கம் பதவி ஏற்றதைத் தொடர்ந்து, ஒரு சமாதான நல்லெண்ண சமிக்கையாக விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருவாரகாலத்திற்கு சகலவிதமான இராணுவ நடவடிக்கைகளையும் இடைநிறுத்தியுள்ளது. இதுசம்பந்தமான அறிவுறுத்தலை தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் விடுதலைப் புலிகளின் சகல படைப் பிரிவுகளுக்கும் நேற்று முன் தினம் அறிவித்துள்ளார்.

போர் இடை நிறுத்தம் தொடர்பாக வெளியான செய்திகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டனர்.

மேலும் அவர்கள் தெரிவிக்கையில், சமாதான நல்லெண்ண சமிக்கையாகவே இந்த தற்காலிக போர் ஓய்வை தலைவர் அறிவித்துள்ளார் எனினும் இது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் தெரிவித்தனர்.

அத்தோடு சிறிலங்கா இராணுவம் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பட்சத்தில விடுதலைப் புலிப் போராளிகள் தற்பாதுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவர் எனத் தெரிவித்த அவர்கள் இவ் இராணுவ நடவடிக்கை

(6 ஆம பக்கம் பார்க்க)



## சுவிஸ் அமைப்பு உதவும்

(சூரிச்)

வடபகுதி ஆஸ்பத்திரிகளுக்கு உதவ சுவிஸ் அமைப்பு ஒன்று முடிவு செய்துள்ளது. வடபகுதி ஆஸ்பத்திரிகளின் அடிப்படை வசதிகளை முன்னுரிமை அடிப்படையில் பூர்த்தி செய்வது என சுவிஸ்சர்லாந்தின் சூரிச் நகரில் நடந்த கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சூரிச் நகரில் நடைபெற்ற வடமாகாண ஆஸ்பத்திரிகளின் அபிவிருத்தி சபை சுவிஸ் கிளை நிர்வாகக் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இதற்கென நிதி திரட்டவும் முடிவு எடுக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் போர் நிறுத்தத்திற்கு ஆக்கபூர்வமாக அரசின் பதில் இருக்கும்

### பாதுகாப்பு பிரதி அமைச்சர் ரத்வத்த

விடுதலைப்புலிகள் போர்நிறுத்தத்தை கடைப்பிடித்தால அரசும் ஆக்க பூர்வமான பதில் நடவடிக்கையை மேற்கொள்ளும் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

நேற்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக பதவி ஏற்ற பின் பி.பி.சிக்கு தகவல் தந்த அமைச்சர் ரத்வத்த, புலிகளின் தற்காலிக போர் நிறுத்தம் நீடித்தால் அரசும் பதிலாக போர் நிறுத்தத்தை அறிவிக்கலாம் என்றார். பகைமை நடவடிக்கையை நிறுத்துவதில் அரசு ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## பாதுகாப்பு, நிதி ஜனாதிபதியிடம்

## அமைச்சரவையில் சிறுமாற்றம்

(கொழும்பு)

நேற்று அறிவிக்கப்பட்ட புதிய மந்திரிசபையில் பாதுகாப்பு, நிதி, பௌத்த சசனம், இனவிவகாரம், தேசிய நல்லிணக்கம் ஆகிய முக்கிய அமைச்சுக்கள் சந்திரிகா குமாரதுங்கா விடமே இருக்கும் அத்துடன் முப்படைகளின் தளபதியாகவும் அவரே இருப்பார். மேலும் பாதுகாப்பு பிரதி அமைச்சராக கேணல் அனுருத்த ரத்வத்தையே தொடர்ந்தும் இருப்பார். பிரதம மந்திரியாக சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்

இதேவேளை நேற்று அறிவிக்கப்பட்ட மந்திரி சபையில் சிறு சிறு மாற்றங்களே இடம் பெற்றுள்ளன பெரும்பாலான அமைச்சர்கள் முன்னர்வகித்த பொறுப்புக்களையே தொடர்ந்தும் பெற்றுள்ளனர் சுற்றுலாத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவிற்கு சுற்றுலாத்துறை மீண்டும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## மாவீரர் எழுச்சி வாரம் உணர்வுபூர்வ ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம் உயிர்களை ஈந்த மாவீரர்களை நினைவில் நிறுத்தும் மாவீரர் நாளை முன்னிட்டு இன்று முதல் மாவீரர் எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது

மாவீரர்களை நினைவு கூரும் முகமாக நினைவுகூரல் நிகழ்ச்சிகள், சிரமதானப் பணிகள், மாவீரர் நினைவு வளைவுகள், நினைவுச் சிகரங்கள் போன்ற பல்வேறு வடிவங்களின் ஊடாக தமிழீழ மக்களனைவரும் உணர்வுபூர்வமாக பங்குபற்றும் வகையிலான மாவீரர் எழுச்சி வாரம் இன்றுமுதல் தமிழீழம் எங்கும் ஆரம்பமாகின்றது

பிரதான வீதிகள், பொது இடங்கள், கேந்திர நிலையங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், பாடசாலைகள், போராளிகளின் பாசறைகள், அலுவலகங்கள் எனப் பல்வேறு இடங்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் பிரதமர் சிறிமா பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று தமது மகளும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் பதவி பிரமாணம் செய்து கொண்டமை நேற்றைய அமைச்சரவை பதவிப் பிரமாண நிகழ்வில் முக்கியத்துவ நிகழ்ச்சியாக அமைந்திருந்தது.

பிரதமராக அவர் பதவிப் பிரமாண பத்திரத்தை வாசித்த போது ஜனாதிபதி சந்திரிகா அமர்ந்திருந்தவாறு அதைக்கேட்டுக் கொண்டிருந்தார். பின்னர் பிரதமருக்கான நியமன பத்திரத்தில் ஜனாதிபதிசந்திரிகா கையொப்பமிட்டு எழுந்து நின்று அதை தனது தாயாரும் புதிய பிரதமருமான சிறிமாவோ விடம் கையளித்தார் அவரும் எழுந்து நின்று அதைப் பெற்றுக்கொண்டார். இதன் பின்னர் இருவரும் பரஸ்பரம் தமக்கிடையே கைகூப்பி வணக்கம் செலுத்திக் கொண்டனர்.

இதை தொடர்ந்து பிரத

[6 ஆம் பக்கம் பார்க்க]

## படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவைஇன்றுவழமையான நேரத்திற்கு நடை பெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## தொண்டாவிடம் சுற்றுலாத்துறை பறிப்பு

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமானிடமிருந்து சுற்றுலாத்துறை அமைச்சுப்பொறுப்பு எடுக்கப்பட்டு கிராமிய தொழிற்துறை அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் அவர் சுற்றுலாத்துறை அமைச்சு பதவி வகித்தார். சந்திரிகாவிற்கு தொண்டமான்ஆதரவு தெரிவித்ததைத் தொடர்ந்து அவருக்கு தர்மசிறி சேனநாயக்காவிடமிருந்து சுற்றுலாத்துறை அமைச்சு பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. தற்போது சுற்றுலாத்துறை மீண்டும் சேனநாயக்காவிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளது.



நேற்று நடைபெற்ற மந்திரிசபை பதவி ஏற்பு வைபவத்தில் பிரதம மந்திரியாக சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவிப் பிரமாணம் செய்துகொள்வதை முதலாவது படத்திலும், நியமனப்பத்திரத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடமிருந்து பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நியமனப்பத்திரத்தில் கையெழுத்திடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம் படப்பிடிப்பு: மணிவண்ணன

### புதிய வகுப்பறைகள் திறப்பு

(கொழும்புத்துறை)
சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் ஒரு லட்சம் ரூபா செலவில் புதிதாக உருவாக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி அண்மையில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கத்தினால் சம்பிரதாயபூர்வமாக மங்கள விளக்கேற்றித் திறந்து வைக்கப்பட்டது.(24)

### முட்டை விலை வீழ்ச்சி

(கொழும்புத்துறை)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது பெருமளவு முட்டைகள் சந்தைகளுக்கு விற்பனைக்கு வந்துள்ளதால் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.
முன்னர் 7-00 ரூபாவாக விற்ற முட்டை தற்சமயம் ஒன்று 5 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்படுகிறது [24]

### நூல்கள் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)
சுவாமி விவேகானந்தரின் 'ஞானதீபம்' நூற் தொகுதி புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி நூலகத்திற்கு பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவா ஆச்சிரமத்தால் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.
ஆச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா இந்நூல்களைக் கல்லூரி அதிபரிடம் வழங்கினார். (24)

### நாய்களுக்கு தடுப்பூசி

(கொழும்புத்துறை)
தென்மராட்சிப் பகுதியில் தொடர்ந்து வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றும் வேலைகள் நடைபெற்று வருகின்றது எனச் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தா. சிவபாதம் அறிவித்துள்ளார்.
இதன் பிரகாரம் இன்று காலை கிளாலி பாலர்பாடசாலையிலும், நாளை காலை மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்திலும் இடம்பெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப்டினன்ட் சுபராஜ்**
(நவரெத்தினம் பரஞ்சோதி)
(களபூமி, காரைநகர்)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 06 . 05 . 1971 | 15 . 11 . 1990 |

பரஞ்சோதி எனப் பெயர் பெற்றாய்
பாசத்துடன் நீ வளர்ந்து
பாசறையில் தான் புகுந்து
அன்புக்கோர் உறைவிடமாய்
அனைவரின் மனதிலும் நிறைந்து நின்றாய்
ஆண்டுகள் எத்தனை போனாலும் - உன்
நினைவு என்றும் எம்மோடு
ஐயா உன் அன்பு முகத்தை காண்பது எப்போது
சோதி நீர் வீர சுதந்திரம் வேண்டி நின்றாயே
வாழ்வதனை மறந்து சென்றாயே

ஆத்தியடிப்பிள்ளையார்கோவிலடி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை. -குடும்பத்தினர்
(10109)

## பஸ் சாரதிக்கு நட்டஈடு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)
பஸ் சாரதி ஒருவர் தொடர்ந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கில் இருபத்தையாயிரம் ரூபாவை நட்ட ஈடாக வழங்க உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
இந்த வழக்கில் வலப்பனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் கான்ஸ்டபிள்கள் இருவர் என் போருடன் சட்டமா அதிபர் பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் பிரதிவாதிகளாக குறிப்பிட்டு இருந்தனர்.
பொலிஸ் அதிகாரிகள் என்ற முறையில், அதிகார துஷ்பிரயோகம் செய்திருப்பதாகவும், மனுதாரர் போதையில் இருந்தார் என்ற குற்றச்சாட்டை பொலிசார் தமது நடத்தையை நியாயப்படுத்த எடுத்த போலியான முயற்சி என்பது நிரூபிக்கப்பட்டதாலும் மேற்படி நான்கு பிரதிவாதிகளும், மனுதாரரின் அடிப்படை மனித உரிமைகளை மீறியிருப்பதாக நீதியரசர் தமது தீர்ப்பில் குறிப்பிட்டு இருக்கிறார்.

## வருடாந்தம் 50,000 பேர் எரிகாயங்களுக்கு இலக்கு

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் சுமார் ஐம்பதாயிரத்துக்கு அதிகமானோர் போத்தல் விளக்கு விபத்துக்களால் எரிகாயங்களுக்கு இலக்காகின்றனர் இவர்களில் நூற்றுக்கணக்கானோர் உயிர் இழக்கின்றனர் இவ்வாறு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை நிபுணராக கடமையாற்றும் டாக்டர் ஒருவர் கூறியுள்ளார்.
அவர் மேலும் கூறுகையில் சுமார் 15 லச்சம் வீடுகள் மின் வசதி பெறாமையால் 30 லட்சம் போத்தல் விளக்குகள் தற்போது பயன் படுத்தப்படுகின்றன எனினும், சுமார் 60 சதவீதமான கிராமங்கள் இன்னும் மின் வசதியை பெறவில்லை என்றும் தெரிவித்தார்.

## தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ து)

### கிளைக் குழு தேர்தல்
### 1994. 11. 19 சனிக்கிழமை

சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தல் 19.11.94-ம் திகதி சனிக்கிழமை யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் கீழ்க்காணும்நேரஒழுங்கின்படிநடைபெறும்10 10 94ல் காட்சிப்படுத்திய வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படும் அனைவரும் சமுகமளித்து கிளைக் குழுத் தெரிவுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்,

★ கூட்டம் ஆரம்பமாகும் நேரம் 1994- 11- 19 சனி மு.ப 11. 00
★ நியமனம் தாக்கல் செய்யும் நேரம் மு ப 11-00- ந.ப 12-00
★ ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளும் நேரம் பி.ப 12_00- 1. 00
★ தேர்தல் நடைபெறும் நேரம் பி.ப 1.00 - 3.00

எ. சின்னத்தப்பி.
தேர்தல் உத்தியோகத்தர்
(சி/10709)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் தென்மராட்சிக் கோட்டம்

### விசேட அறிவித்தல்

**விசேட பொதுச்சபைக் கூட்டம்**

இடம்: யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபம்
காலம்: 16.11.1994 (புதன்) பி.ப. 4.00 மணி
விடயம்: மாவீரர் எழுச்சி வார ஏற்பாடுகள் பற்றிய விபரங்கள்
குறிப்பு: கோட்டத்தில் உள்ள சகல தனியார் கல்வி நிறுவனங்களும் பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்களும் தமது சந்தாவை நிலுவையின்றிச்செலுத்தி வீண்சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்,
கூட்டத்துக்கு வருகை தராததினால் ஏற்படும் சிரமங்களையும் தவிர்த்துக் கொள்வது விரும்பத்தக்கது.

தலைவர்
தனியார் கல்வி
நிறுவன ஒன்றியம்
தென்மராட்சிக் கோட்டம்
[10112]

## வாரிவளவு நல்லியக்கச் சபை -காரைநகர்

காரை. மாணவர்களுக்கான
க. பொ. த. (சா/த) 1994
கணித - விஞ்ஞான

### போட்டிப் பரீட்சை

காலம் -19-11-94 கணிதம் 20-11-94 விஞ்ஞானம்
நேரம் - காலை 8 மணி
இடம் - யா/ நாவலர் ம. வித்தியாலயம்
பிரவேச அன்பளிப்பு ரூபா 35/- மட்டும்

மேற்படி பரீட்சையில் பங்குபற்ற விரும்பும் காரை. மாணவர்கள் அன்றைய தினத்தில் பதிவு செய்து பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். பரீட்சை முடிவில் வினாத்தாள் தயாரித்த ஆசிரியர்களினால் கலந்துரையாடல் நடாத்தப்படும்.
- செயலர்

விளம்பர அன்பளிப்பு:
அழகு சாதனப்பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள் அத்தனையும் பெற்றுக்கொள்ள ஒரே இடம்,

**சிவகாந்தா விற்பனை நிலையம்**

இல: 65,66, சிறப்பு அங்காடி. (நவீன சந்தை) யாழ்ப்பாணம்.
(10108)

## நினைவு கூருகின்றோம்...

### 15. 11. 1994

1987-ம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை-விநாயகபுரம் பகுதியில் எதிர்பாராத விதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப் பிரிந்த,
**ரொனி / ஐயர்** (வேலுப்பிள்ளை பூபாலப்பிள்ளை - திருக்கோயில் - அம்பாறை)

1988-ம் ஆண்டு அம்பாறை - நிந்தவூர்ப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,
**கப்டன் தாசன்** (சண்முகப்பிள்ளை கணபதிப்பிள்ளை - காரைதீவு - 03 அம்பாறை)

அம்பாறை, நிந்தவூர் நொண்டிச்சேனைப் பகுதியில் இந்தியப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,
**ரஞ்சித்** (கந்தக்குட்டி கிருபை - நிந்தவூர் 05- அம்பாறை)

மட்டு - கோரக்கல்மடுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**சுகந்தன்** ( - புஸ்பராஜா - கோரக்கல்மடு, கிரான்- மட்டு)

**ராஜா** ( - - - )

1990-ம் ஆண்டு காரைநகர் முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்காக் கடற் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**லெப். சுபராஜ்** (நவரட்ணம் பரஞ்சோதி - சத்திரந்தை, களபூமி - காரைநகர்)

1993-ம் ஆண்டு முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,
**மாணவன்** (முத்தையா சிவகுமார் -62, கண்ணாபுரம், கொட்டடி யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்;

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**
(சி- 10707)

## 15-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17-02.1910
மறைவு: 15. 11. 1979

**திரு. செபஸ்தியாம்பிள்ளை அமிர்தநாதன்**
(முன்னாள் உதவி சுங்க தடுப்பு உத்தியோகஸ்தர்)

பதினைந்து ஆண்டுகள் ஓடிமறைந்தாலும் அப்பா உங்கள் அன்பு உள்ளம் எங்களைவிட்டு நீங்கா. எமை விட்டு நீங்கள் சென்றாலும் உங்கள் நினைவு எம்முடனே அன்பு அப்ப உங்கள் ஆன்மா சாந்தி பெறும்.

துயருறும்
மனைவி,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.
நல்லாயன் வீதி, சில்லாலை.
265, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(10113)

## அனுதாபச் செய்தி

யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சொத்தணியின் நிர்வாக சபை உறுப்பினர் திரு. ஆனந்தம் பிரான்சிஸ் அவர்களின் அன்புத் தந்தையார்,

**திரு. சின்னப்பு ஆனந்தம்**

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சொத்தணி,

மற்றும், கோப்பாய், அரியாலை, யாழ்ப்பாணம், வேலணை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
[சி-10713]


## உங்களது தேவை இவ்வாறானதா?

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளிவிபரக் கிளை இவ்வாண்டு முதல் தனது செயற்பாடுகளை பாரிய அளவில் விரிவுபடுத்தியுள்ளது.

### இதன்படி உங்களுக்குத் தேவையான

01. குறிப்பிட்ட கிராமத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டவர்களுக்கு அக்கிராமம் பற்றிய ஆய்வுகளையோ
02. குறிப்பிட்ட சமூகம் பற்றிய ஆய்வுகளையோ
03. குறிப்பிட்ட உற்பத்திப் பொருள்களிற்கான நுகர்வோர் மட்டத்தில் உள்ள திருப்தியின் அளவு பற்றிய ஆய்வுகளையோ

மேற்கொள்ள விரும்பும் உங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கவோ. அல்லது அவை பற்றிய பூரண ஆய்வு செய்து ஆய்வறிக்கைகளை வழங்கவோ, பல்லாண்டு காலம் இத்துறையில் சேவையாற்றிய ஆலோசகர்களுடன் தயாராக உள்ளனர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு புள்ளி விபரக் கிளையினர்.

### அது மட்டுமன்றி

ஆய்வறிக்கைகளை எழுதும்
ஆய்வாளர்கள்
பல்கலைக்கழக மாணவர்கள்
பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றவர்களுக்கு தேவையான புள்ளி விபரங்களை வழங்கி வருவதுடன் அரச, அரச சார்பற்ற, சமூக சேவை அமைப்புகளுக்குத் தேவையான ஆய்வறிக்கைகளைத் தயாரித்து வழங்கவும் தயாராய் உள்ளனர். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளி விபரக் கிளையினர்.

மேலதிக விபரங்களுக்கு;-

**புள்ளி விபரக் கிளை,**
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
**தாவடி**
எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
(சி-10711]

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளல் - 1994

(நேற்றைய தொடர்ச்சி)

## ஆடி 1994

### காரைநகர்
[யா/கா]
01. 264
02. 979

### வேலணை
[யா/வே]
01. 63
02. 93
03. 206
04. 589
05. 833

### கரவெட்டி
(யா/க)
01. 53 06. 975
02 158 07. 1013
03. 593 08 1800
04. 745 09 3679
05. 842 10 4153

### பருத்தித்துறை
[யா/பரு]
01 360 05. 611
02. 513 06 813
03. 547 07. 861
04. 602 08. 1709

### வடமராட்சிகிழக்கு
[யா/வ.கி]
01. 38
02. 83

### சாவகச்சேரி
[யா/சா]
01. 206 08. 864
02. 262 09. 1487
03. 266 10. 2425
04. 372 11. 3619
05. 553 12. 5355
06 595 13 6750
07. 840

### பச்சிலைப்பள்ளி
(கி/ப)
01. 26

### வெளியகல்வு
(யா/வெ)
01. 06
02. 134
03. 510

## ஆவணி-1994

### நல்லூர்
(யா/ந)
01. 49 06. 1493
02. 321 07. 3082
03. 324 08. 3514
04. 984 09. 4071
05. 1452 10. 5893

### யாழ்ப்பாணம்
(யா/யா)
01. 327 06. 1530
02. 492 07. 2144
03. 705 08. 3428
04. 907 09. 3729
05. 1254 10. 4476

### கோப்பாய்
[யா/கோ]
01. 281 05. 4561
02. 1696 06. 5189
03. 2721 07. 6158
04. 3176 08. 6406

### உடுவில்
[யா/உ]
01. 102
02. 572
03. 671
04. 1560

### மானிப்பாய்
(யா/மா)
01. 506 05. 2156
02. 866 06. 2186
03. 1922 07. 2963
04. 2100

### தெல்லிப்பளை
[யா/தெ]
01. 39 05. 721
02. 102 06. 727
03. 175 07. 905
04. 673 08. 4330

### சங்கானை
[யா/ச]
01. 133 06. 958
02. 389 07. 1303
03. 519 08. 3783
04. 592 09. 4231
05. 668

### காரைநகர்
[யா/கா]
01 35
02. 665

### வேலணை
(யா/வே)
01. 308
02. 360
03. 499
04. 809
05. 2603

### கரவெட்டி
(யா/க)
01. 54 06. 2431
02. 203 07. 2816
03. 1753 08. 3137
04. 1899 09. 4361
05. 2184 10. 5063

### பருத்தித்துறை
[யா/பரு]
01. 161 05. 621
02. 215 06. 2039
03. 315 07. 3086
04. 332 08. 3154

### வடமராட்சிகிழக்கு
(யா/வ.கி)
01. 78
02. 800

### சாவகச்சேரி
(யா/சா)
01. 90 08. 2463
02. 358 09. 2563
03. 376 10. 3152
04. 728 11. 4638
05 1496 12. 5609
06. 1868 13 6614
07. 2175

### பச்சிலைப்பள்ளி
(கி/ப)
01. 175

### வெளியகல்வு
(யா/வெ)
01. 110
02 125
03. 1050

## புரட்டாதி - 1994

### நல்லூர்
[யா/ந]
01. 38 06. 970
02 53 07. 3557
03. 363 08. 4662
04. 557 09 4878
05. 702 10. 5877

### யாழ்ப்பாணம்
[யா/யா]
01. 177 06. 948
02 209 07. 3666
03. 370 08. 4352
04. 623 09. 4501
05. 933 10. 4892

### கோப்பாய்
[யா/கோ]
01. 244 05. 936
02. 262 06. 3925
03. 369 07. 4379
04. 904 08. 6458

### உடுவில்
(யா/உ)
01. 202
02. 517
03. 893
04 2891

### மானிப்பாய்
(யா/மா)
01. 613 05 879
02. 682 06. 939
03. 810 07. 2669
04. 862

### தெல்லிப்பளை
(யா/தெ)
01. 08 05. 976
02. 268 06. 2457
03. 517 07. 3548
04. 720 08. 4398

### சங்கானை
[யா/ச]
01. 32 06. 678
02. 92 07. 739
03. 287 08. 809
04. 378 09. 2427
05. 484

### காரைநகர்
(யா/கா)
01. 545
02. 689

### வேலணை
[யா/வே]
01. 107
02. 199
03. 270
04. 393
05. 890

### கரவெட்டி
[யா/க]
01. 39 06. 2447
02. 336 07. 3102
03. 577 08. 4005
04. 792 09. 4698
05. 1152 10. 5200

### பருத்தித்துறை
(யா/பரு)
01. 34 05. 733
02. 43 06. 865
03. 223 07. 926
04. 731 08. 3166

### வடமராட்சிகிழக்கு
(யா /வ.கி)
01. 217
02. 668

### சாவகச்சேரி
[யா/சா]
01. 397 08. 3569
02. 510 09. 4687
03. 726 10. 5689
04. 735 11. 5850
05. 739 12. 6017
06. 801 13. 6243
07. 831

### பச்சிலைப்பள்ளி
(கி/ப)
01. 42

### வெளியகல்வு
(யா/வெ)
01. 345
02. 717
03. 796

## ஐப்பசி-1994

### நல்லூர்
(யா/ந)
01. 414 06. 3483
02. 1105 07. 4745
03. 1478 08. 5198
04 2553 09. 5331
05. 3374 10. 5408

### யாழ்ப்பாணம்
(யா/யா)
01. 54 06. 584
02. 267 07. 1497
03. 423 08. 2323
04. 447 09. 2337
05. 508 10. 3854

### கோப்பாய்
(யா/கோ)
01. 28 06 931
02. 124 07. 3552
03 257 08. 5341
04. 278
05. 405

### உடுவில்
(யா/உ)
01. 921
02. 2227
03. 2954
04. 3181

### மானிப்பாய்
(யா/மா)
01. 320 05. 854
02. 753 06. 893
03. 799 07. 3792
04. 801

### தெல்லிப்பளை
[யா/தெ]
01. 06 05. 490
02. 93 06. 628
03. 312 07. 782
04. 441 08. 2794

### சங்கானை
[யா/ச]
01. 42 06. 3045
02. 91 07. 3259
03. 209 08. 4168
04. 745 09. 4623
05. 1346

### காரைநகர்
(யா/கா)
01. 104
02. 741

### வேலணை
[யா/வே]
01. 95
02. 134
03. 842
04. 959
05. 1576

### கரவெட்டி
[யா/க]
01. 48 06. 569
02. 65 07. 718
03. 70 08. 2208
04. 393 09. 3427
05. 443 10 4563

### பருத்தித்துறை
(யா/பரு)
01. 13 05. 352
02. 60 06. 598
03. 99 07. 959
04. 179 08. 991

### வடமராட்சி கிழக்கு
[யா/வ. கி]
01. 424
02. 531

### சாவகச்சேரி
(யா / சா)
01. 19 08. 2505
02. 294 09. 2573
03 366 10. 2846
04. 477 11 3045
05 807 12. 5466
06. 1634 13. 6448
07. 1895

### பச்சிலைப்பள்ளி
(கி / ப)
01. 539

### வெளியகல்வு
(யா/வெ)
01. 09
02. 16
03. 411

## கார்த்திகை 1994

### நல்லூர்
(யா/ந)
01. 71 06. 1975
02. 478 07. 2334
03. 546 08. 3055
04. 865 09. 3677
05. 1145 10. 5636

### யாழ்ப்பாணம்
(யா/யா)
01. 08 06. 1767
02. 624 07. 2072
03. 646 08. 2590
04. 887 09. 3270
05. 946 10. 3349

### கோப்பாய்
(யா/கோ)
01. 55 06 557
02. 145 07. 3276
03. 197 08. 6019
04. 312
05. 514

### உடுவில்
(யா/உ)
01. 22
02. 388
03. 479
04. 598

### மானிப்பாய்
(யா/மா)
01. 19 05. 2733
02. 137 06. 3247
03. 437 07. 3759
04. 718

### தெல்லிப்பளை
[யா/தெ]
01. 201 05. 3259
02. 1589 06. 3402
03. 1695 07. 4146
04. 2062 08. 4268

### சங்கானை
[யா/ச]
01. 06 06. 3273
02. 303 07. 3698
03. 374 08. 4459
04. 375 09. 4574
05. 2435

### காரைநகர்
(யா/கா)
01. 470
02. 649

### வேலணை
(யா/வே)
01. 410
02. 539
03. 557
04. 1890
05. 1920

### கரவெட்டி
(யா/க)
01. 248 06. 2892
02. 473 07. 2932
03. 543 08. 3659
04. 600 09. 4034
05. 1084 10. 4782

### பருத்தித்துறை
(யா/பரு)
01. 77 05. 1213
02 338 06. 2318
03. 421 07. 2642
04. 549 08. 4271

### வடமராட்சிகிழக்கு
(யா/ வ.கி)
01. 99
02. 332

### சாவகச்சேரி
(யா/சா)
01. 164 08. 3522
02. 282 09. 3630
03. 427 10. 3667
04 2323 11. 5526
05. 2375 12. 5923
06. 2742 13. 6370
07. 2924

### பச்சிலைப்பள்ளி
[கி/ப]
01. 38

### வெளியகல்வு
(யா / வெ)
01. 56
02 348
03. 904

# 5-வது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

இரண்டாவது ஈழப் போர் 1990-ல் ஆரம்பமாகியது. போர் அனர்த்தங்கள் உக்கிரமடைந்தன. மக்கள் தத்தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர். புகலிடம் தேடி நகர்ந்தனர். காணுமிடம் எல்லாம் இடம்பெயர்ந்தோர் சன்.

இடம்பெயர்ந்தோர் தங்ககங்கள் அமைக்கப்பட்டன. தங்ககங்கள் பராமரிக்கப்பட வேண்டியதாயிற்று மக்களுக்கான சேவைகள், உதவிகள் வழங்கப்படவேண்டும்.

அரச இயந்திரங்களால் மக்களின் 100% தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. மாவட்டத்தில் ஆங்கும் இங்குமாகச் சில அரசசார்பற்ற நிறுவனங்கள் தம் சேவைகளை ஆற்றி வந்தன.

ஆனாலும், மொத்தமாக இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகள் கவனிக்கப்படவில்லை. குறிப்பிட்ட சில அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட ஒரு சில குறிப்பிட்ட வட்டங்களிலேயே சேவையாற்றிக் கொண்டன.

பல இடங்களில் அரசசார்பற்ற நிறுவனங்களின் சேவைகள், உதவிகள் பாதிக்கப்பட்டு புலம் பெயர்ந்த மக்களுக்குக் கிடைக்கவில்லை.

அரசசார்பற்ற நிறுவனங்கள் மத்தியில் இணைப்பும் - தொடர்பும் - புரிந்துணர்வும் அற்ற நிலை தெரிந்தது.

யாழ் மாவட்டத்தில் செயற்பட்டு வரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் யாவற்றையும் ஒரு குடையின் கீழ் இணைந்து செயற்பட வேண்டும் என்ற சிந்தனை 1990 பிற்பகுதியில் தோன்றியது.

அதன் வெளிப்பாடாக 1990 நவம்பர் 15-ல் அமைக்கப்பட்டது தான் யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

இன்று இணையத்தின் நான்காவது ஆண்டு தினமாகும்.

மாவட்டரீதியில்செயற்பட்டு வரும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள் மத்தியில் ஒருங்கிணைப்புச் சேவைகள் பகிர்வையும் ஏற்படுத்தும் பொருட்டும், இரட்டிப்புச் சேவைகளைத் தவிர்க்கும்காரணமாகவும் காலத்தின்தேவை கருதி உதயமாகியது தான் இணையம்.

சர்வதேச, தேசிய, மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் அங்கத்துவம் பெற்றிருக்கும் இந்த நிறுவனம், பதினாறு கம்பிகளைக்கொண்ட குடை போன்று காட்சி தந்து வருகிறது.

இவ் இணையத்தில் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ. இ), ஒறெட்பார்னர், கெயர், போரூட் ஆகிய சர்வதேச நிறுவனங்களும் -

வை. எம். சீ. ஏ., இயூடெக், மெதடிஸ்த திருச்சபை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சர்வோதயம், தென் இந்தியத் திருச்சபை ஆகிய தேசிய நிறுவனங்களும் -

ஆர். ஆர். எல் '83, அறவழிப் போராட்டக் குழு, மக்கள் நலன் காக்கும் பிரிவு, ஊற்று ஆகிய உள்ளூர் நிறுவனங்களும் இணையத்தில் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

இவற்றினை விட, யாழ் மாவட்டத்தில் சேவை புரிந்து வரும் ஐ. சி. ஆர். சி, யூ. என், எச். சி. ஆர் போன்ற சர்வதேச மட்ட நிறுவனங்கள் இணையத்தில் அவதானிப்பு நிலையாளர்கள் அந்தஸ்தினைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் மக்கள் மத்தியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் சமூகம் ஒன்றினைக்கட்டி எழுப்பிய வரலாற்று முக்கியத்துவம் பெற்ற பணியில் இணையம் திகழ்ந்து வருகின்றது.

மேலும், நாட்டில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ் மாவட்டத்தில உள்ளதாகும். இத்திட்டத்தினைப் பின்பற்றி மேலும் பல மாவட்டங்களில் இது போன்ற இணையம் அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில், யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஏனைய பிரதேசங்களுக்கு முன்மாதிரியாக இருந்து வருகின்றது.

இணையம் யாழ் மாவட்டத்தில் செயற்படும் அரச, தனியார் அமைப்புக்களுடனும் ஆரோக்கிய உறவுகளையும் - தொடர்புகளையும் முன்னேற்றி வருகின்றது.

**க. ஜீவகதாஸ்**

இராசாவின் தோட்ட வீதி இல. 100-ல் அமைந்திருக்கும் இணையச்செயலகம், அரச சார்பற்ற நிறுவனங்களின் - அனுபவம் - அறிவு - தகவல்கள் பகிர்வு கூடமாகவும் - மத்திய சந்திப்பு மையமாகவும் திகழ்கிறது.

புனர்வாழ்வுத்திட்டங்கள் பற்றிய எண்ணக்கருக்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் விபர ஏடு, அரச சார்பற்ற நிறுவனம் என்றால் என்ன? என்ற நூலினையும் கடந்தநான்கு ஆண்டு காலப் பகுதியில் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் "நெற்வேக்" (NET WORK) எனும் பெயரில ஆங்கில / தமிழ் செய்திக் கடிதத்தினையும் இணையம் அரையாண்டிற்கு ஒருதடவை வெளியிட்டு வருகின்றது.

யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் எதிர்காலத்திலு மேலும் பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை ஆற்ற வேண்டும் என இன்றைய நாளில் வாழ்த்துவோம்-பிரார்த்திப்போம்

## திருத்தம்

நேற்று வெளியான தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு தொடர்பானதொடர்பு இலக்கத்தில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆனிமாதத்திற்குரிய இலக்கம் யா/சா/3309ற்கு பதிலாக யா/சா/4309 என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளதுஇதனை யா/ச/3309 என திருத்திக் கொள்ளவும்

# தீவகத்தின் சில பகுதிகளில் மக்கள் நடமாடத் தடை

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதிகளில் குறிப்பிட்ட சில பிரதேசங்கள் பொதுமக்களின் பாவனைக்குத் தடை செய்யப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது. ஊர்காவற்றுறை வங்கு வீதியின் அராலிச் சந்தியில் இருந்து 8-ம் கட்டை வரையான பிரதான வீதிப் பகுதி அராலித் துறையை அண்டிய வெளிப் பிரதேசம், மற்றும் நயினை கடற்படை முகாம் உட்பட ஏனைய இராணுவ முகாம்களை அண்டிய வெளிகள் என்பவற்றை சிறிலங்காப் படையினரும் ஈ. பி. டி. பி. யினரும் பொதுமக்களை பாவிக்க வேண்டாம் என கோரியுள்ளதாகவும் மேலும் தெரிய வருகின்றது. குறிப்பாக விடுதலைப்புலிகள் தீவகத்தில் ஊடுருவி தாக்குதல்களை நடாத்திய இடங்களுக்கு எக்காரணம் கொண்டும் பொதுமக்கள் செல்லக்கூடாது எனவும் உத்தரவிடப்பட்டுள்ளதாம். (22)

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**சதாசிவம் செல்வராணி (லதா)**

அன்னை மடியில் 1974-03-01 அரக்கர் அழிப்பில் 1990-11-15

நிம்மதியாய் வாழம்மா
இறைவன் திருவடியில்

நாலாண்டு ஆனதம்மா லதா
நாங்களுன்னை மறக்க முடியவில்லை
காலன் உன்னை கவர்ந்த நாள்முதலே
கலங்கியே வாழ்கின்றோமம்மா

பெண்மைக்கே இலக்கணமாய்
பெருமையுடன் வாழ்ந்தாயே - தமிழ்
மண்ணிலே மணமகளாவதற்கு
மங்கைப் பருவம் கடந்தாயே

தலை மகளாய் இலிக்கின்ற தமிழ்மகளாய்
தரணியிலே எங்களுக்கு கிடைத்த செல்வமே!
நிலைக்கும் உன் இலட்சணங்களென நினைத்தோம்
நிலை மாறிப் போனதம்மா! உன் நினைவுதான்
நீளுதம்மா,

மகளே! உன்னை எமத்தனி தர்சினியை
மாற்றானின் ஷெல் பறித்திட்ட நியாயமென்ன...?
நிலவே நீ நீண்ட நினைவோடு எம்மில் கலந்து
விட்டாய்
நீ நிம்மதியாய் வாழம்மா இறைவன் திருவடியில்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பலுகாடு, காரைநகர்.

என்றும் எம் செல்வங்களின் நினைவில் கலந்து வாழும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்

(சி-10705)

## இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் பாக் படையினர் மோதல்

### 11 பேர் பலி

(இஸ்லமாபாத்)

பாகிஸ்தானின் வடமேற்கு பிராந்தியத்தில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் அரச குருப்பினர்களுடன் சண்டையிட்டதில் குறைந்த பட்சம் 11பேர் கொல்லப்பட்டு உள்ளனர்.

ஓரளவுக்கு சுயாட்சியைக் கொண்ட பழங்குடிமக்கள் வாழும் இப் பிரதேசத்தில் இஸ்லாமிய சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்று இவ் இஸ்லாமிய தீவிரவாதிகள் கோரிக்கை விடுத்து வருவது தெரிந்ததே.

ஆப்கான் எல்லைக்கு அருகே மலை உச்சிகளில் இருக்கும் முகாம்களிலிருந்து அவர்களை வெளியேற்றும் முகமாக துணை இராணுவ எல்லைப் படையினர் மீது மோட்டர்கள் மற்றும் ராக்கட் குண்டுகளால் அவர்கள் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இச் சண்டைகளில் கிளர்ச்சிக்காரர்கள் ஆறு பேரும், துருப்புக்களில் இருவரும் பொதுமக்கள் சிலரும் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## குடிசார் தொழில்நுட்பவியல் பயிலுநரை தெரிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் கோரல்

பொறியியல் துறையில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் எமது நிறுவனத்தில் தொழில்நுட்பவியல் பயிலுநரை தெரிவு செய்து தகுதி பெற்ற பொறியியலாளர்களின் மேற்பார்வையில் குடிசார் தொழில்நுட்பவியல் துறையில் பாடநெறி ஒன்றினை பயிற்றுவிப்பதுடன், செய்முறைப் பயிற்சியும் வழங்கப்படும். மேற்படி பயிற்சி நெறியில் இணைய விரும்பும், கீழ்வரும் தகைமையுடைய இருபாலாரும் 25-11-1994 இற்கு முன்பாக விண்ணப்பிக்கலாம். பயிற்சிக்காலத்தில் விசேடபடி வழங்கப்படும்

தகைமை

க. பொ. த. (உ/த) பரீட்சையில் கணிதப்பிரிவில் மூன்றுபாடம் சித்திபெற்றிருத்தல் விரும்பத்தக்கது

க. பொ. த. (சா/த) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானத்தில் விசேட சித்தி எய்தியவர்களும் விண்ணப்பிக்கலாம்,

தொடர்பு முகவரி:
பொது முகாமையாளர்,
கரம் நிறுவனம்,
விமலகுமார் வீதி,
ஆனைக்கோட்டை. (10088)

தென்கிழக்காசியாவில்

# இராணுவ அச்சுறுத்தல் எதையும் அமெரிக்கா சமாளிக்கத் தயார்

### -அதிபர் பில் கிளிண்டன்

(மணிலா)

தென்கிழக்காசியாவில் ஏற்படக்கூடிய எந்தவொரு இராணுவ அச்சுறுத்தலையும் சமாளிக்கக் கூடிய வலிமையுடன் அமெரிக்கா விளங்குகின்றது. இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் தெரிவித்துள்ளார்,

பிலிப்பைன் சிற்கு விஜயம் செய்த அவர் அங்குள்ள இரண்டாவது உலகப் போரில் உயிர்நீத்தவர்களின் சமாதியில் அஞ்சலி செலுத்தி உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறுகையில் தென்கிழக்காசியாவின் ஸ்திரத்தன்மையை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அமெரிக்காவுக்கு உள்ளது எனவும்: அதற்கான வலிமையுடன் அமெரிக்கா விளங்குவதாகவும் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபரின் இவ் விஜபத்தை எதிர்த்து மணிலாவில் இடதுசாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. அமெரிக்க அதிபர் அங்கிருந்து இந்தோனேசிய தலைநகர் ஜாகர்த்தாவுக்கு புறப்பட்டுச் சென்றார்.

# அல்ஜீரிய விமானம் கடத்தியோர் ஸ்பெயினில் சரண் அடைந்தனர்

(மட்றிட்)

அல்ஜீரிய நாட்டு விமானமொன்றைக் கடத்திச் சென்ற ஆட்கள் சுமார் எட்டு மணி நேரம் அதனைத் தடுத்து வைத்திருந்த பின்னர் ஸ்பெயினில் அதிகாரிகளிடம் சரணடைந்துள்ளனர் 39பேர்களை ஏற்றிச் சென்ற பார்க்கர் ஏழுரகவிமானத்தைஸ்பெயின் தீவு ஒன்றுக்கு ஓட்டிச் செல்ல வேண்டுமென்று ஆணை பிறப்பித்த கடத்தல்காரர் மூவரும், சிறைவைக்கப்பட்டு இருக்கும் அரசியல் கைதிகளை விடுவிக்கவும், புதிய தேர்தலை நடத்தவும் அல்ஜீரிய அரசு இணங்காவிட்டால் அவ் விமானத்தை வெடி வைத்து தகர்க்கப் போவதாக மிரட்டி இருந்தது குறிப்பிடத்தக்கது. ஏழு மணி நேரத்தின் பின் பயணிகளை விடுவித்த கடத்தல்காரர்கள் பின்னர் தாமும் ஸ்பானிய அதிகாரிகளிடம் சரண் அடைந்தனர். எனினும் எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் இவர்கள் சரணடைந்தனர் என்பது பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

# சீரற்ற காலநிலையால் ஒரே நாளில் 12 மீனவரைக் காணவில்லை

(குருநகர்)

குருநகர் பகுதியிலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்ற மேலும் ஐவரைக் காணவில்லையெனத் தற்போது தெரியவந்துள்ளது.

கடந்த 9-ம் திகதி ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் மொத்தம் 12 பேர் இதுவரை காணாமல் போயுள்ளதாக கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குருநகர் தொடர்மாடிப் பகுதியைச் சேர்ந்தவர்களான அமிர்தம் தனேந்திரன் (வயது 22), குட்டிராஜ் (வயது 18), மரியநாயகம் ஜப்பான் (வயது 28), மருதலிங்கம் ராமு (வயது 37) ஆகிய மீனவர்களும் சம்பவதினம் கடலுக்குச் சென்று இதுவரை திரும்பவில்லை என்ற தகவலும் தற்போது வெளியாகியுள்ளது.

காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுத்தருமாறு உறவினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் உதவியை நாடியுள்ளனர். (21)

## வலி.மேற்கு பகுதியில் பாதைகள் சீர்கேடு

(தொல்புரம்)

வலி மேற்கின் சில பகுதிகளில் பாதைகள் சீரழிந்து காணப்படுகின்றன. இந்த நிலை தொடர்வதால் பிரயாணிகளுக்கு பல அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக சங்கானை சந்தை சதுக்க பிரதான வீதியிலிருந்து சித்தன் கேணி மூளாய் வரையான பிரதான வீதி மிகவும் சேதமுற்று குண்டும் குழியுமாக காணப்படுகிறது இந்தப் பாதை வழியாக அநேக பயணிகள் நானாந்தம் சென்று வருவதால் அன்றாடம் தாங்கொணா கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர் மழை காலத்தில் வெள்ளச் சிதறல்கள் பட்டு சில பயணிகளின் உடைகள் சேற்று நீரால் அசுத்தப்படுகிறது இப்படியான பல இன்னல்களை வீதியில் எதிர்நோக்கும் மக்களின் துயர் துடைக்கப்படுமா என மக்கள் எதிர்பார்த்துள்ளனர் (41)

## சிரமதான பணிகள்

லெப், கேணல் தியாகி திலீபனின் நினைவை முன்னிட்டு யாழ் குடாநாட்டின் பல இடங்களிலும் கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலமாக 130,000 ரூபா பெறுமதி மிக்க பல சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், உடுவில் சண்டிலிப்பாய், சங்கானை, பருத்தித்துறை, கரவெட்டி, பளை கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி ஆகிய வட்டங்களில் குளங்கள் புனரமைப்பு மயானங்கள் வீதிகள் திருத்தம், பொதுக்கிணறுகள் துப்புரவு, வீதியோர மரக்கன்றுகளின் கூடுகள் புனரமைப்பு, வீதியோர மரநடுகை போன்ற 35ற்கும் மேற்பட்ட வேலைகளை கிராமிய உற்பத்திக் குழுக்களும் மக்களும் இணைந்து செயற்படுத்தியுள்ளனர்

## மாணவர் உணவு முத்திரை விரிவுபடுத்தும் முயற்சி பூர்த்தி

(தொல்புரம்)

வறுமை நிவாரணமுத்திரை பெற்றவர்களின் பிள்ளைகளுக்கு மாத்திரம் இதுவரை கிடைத்து வந்த பாடசாலை மாணவர்களுக்கான விசேட உணவு முத்திரை ஏனைய மாணவர்களுக்கும் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

இதன் பிரகாரம் தற்போது வருமானம் கூடியவர்களின் பிள்ளைகளுக்கும், இடம்பெயர்ந்த மாணவர்களுக்கும் ஆன விபரம் வலி மேற்கு பிரதேச செயலகத்தினர் சேகரித்து வருகின்றனர். இவ் விசேட உணவுமுத்திரைகள் 5 வயது முதல் 18 வயதுக்குட்பட்டவர்களுக்கே வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது. (41)

## இணைந்த சேவை ஊழியருக்கும் கஷ்டப்படி வழங்கவேண்டும்

(நல்லூர்)

பருத்தித்துறை கிழக்கில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கஷ்டப்பிரதேசப் படி, இங்குள்ள கல்விக் கோட்ட அலுவலகங்களில் கடமைபுரியும் இணைந்த சேவையைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் வழங்க யாழ் வலயம் 1ற்கான கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என நேற்று முன் தினம் யாழ் கல்வித்திணைக்களத்தில் நடைபெற்ற யாழ் கல்வித்திணைக்கள இணைந்த சேவை ஊழியர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சியின் போது இதன் முன்னைய செயலாளர் தி. தவராஜாவினால் கோரிக்கை விடப்பட்டது

இணைந்த சேவை ஊழியர்கள் மிகவும் குறைந்த சம்பளம் பெறுகின்ற போதிலும் இங்கு செல்லும் ஊழியர்கள் மிகவும் சிரமத்துக்கு மத்தியிலேயே கடமைக்குச் சென்று வருகிறார்கள் என்றும் இவர்களுடைய கஷ்டநிலையை உணர்ந்து இக் கஷ்டப் பிரதேசப் படியைப் பெற்றுக்கொடுக்க யாழ் கல்வி வலயம் 1ற்கான கல்விப் பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் இவ் ஒன்று கூடலில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ் கல்வித்திணைக்கள கணக்காளரும் இணைந்த சேவைச் சங்கத் தலைவருமான இ.சுகுணதிரன் தலைமையில் நடைபெற்ற இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் யாழ் கல்வி வலயம் 1ற்கான கல்விப் பணிப்பாளர் செல்வி தி பெரியதம்பி முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். (17)

## கைத்தறிநிலையத்தை இயக்க முயற்சி

(தொல்புரம்)

சமீப காலமாக இயங்காமல் இருந்து வந்த கைத்தறி நிலையங்களை இயங்க வைப்பதற்கான முயற்சிகளை வலி மேற்கு பிரதேச செயலகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.


மேற்படி கைத்தறி நெசவு நிலையங்களின் ஒன்றான மூளாய் கைத்தறி நெசவு நிலையத்தை இயங்க வைப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை அவ்வூர் கிராம மக்கள் ஊக்கப்படுத்தி வருகின்றனர். இந்த கைத்தறி நிலையத்தை இயங்க வைத்து பல இளம் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வலி மேற்கு பிரதேச செயலரும், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் முயன்று வருவதாக மூளாய் கிராம மக்கள் தெரிவித்தனர். (41)

## வருடாந்த உற்சவம்

யாழ். கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிச் செபமாலை வழிபாடு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுகின்றன;

தொடர்ந்து நவநாட்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெற்று 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்கு கிறிஸ்து அரசர் திருவிழாக் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (24)

# முதலாம் ஆண்டு நினைவு



அமரர்- உயர்திரு:

**சுப்பையா சதானந்தன் (சாந்தம்)**

(ஓய்வு பெற்ற யாழ் செயலக உத்தியோகத்தர்)

தோற்றம்:- 28. 1. 32 மறைவு- 27. 10. 93

திதி- 15. 11. 94

தந்தையே நீங்கள் தரணியை மறந்து ஓராண்டு ஓடி மறைந்ததுவோ உங்களைப்போல் இவ்வுலகில் யாரும் உளரோ அப்பா? உங்களின் அன்பும் அறிவுரையும் என்றென்றும் எம்மை வழி நடத்தும் அப்பா உங்களின் செல்வங்கள் வெவ்வேறாக பிரிந்திருப்பினும் உங்கள் நினைவுகளால் ஒன்றுபட்டுத்தான் இருக்கின்றோம் அப்பா ஆண்டுகள் எத்தனை சென்றாலும் எங்களின் அன்பு உங்களுக்கே சமர்ப்பணம்.

உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள் அருமைப் பேர்த்தி பௌர்ணிகா, தம்பி, பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள்;

இல. 6/2 புறாடி முன் ஒழுங்கை
புங்கன்குளம் அரியாலை,
யாழ்ப்பாணம்

# 8-ம் ஆண்டு நினைவு



அமரர் - உயர்திரு.

**கந்தையா சந்திரதாசன் (சந்திரன்)**

(சுங்க இலாகா உத்தியோகத்தர்)

உதயம் 10-1-52 அஸ்தமனம் 6-1-86

ஆண்டு எட்டு சென்றதண்ணா உங்கள் அழகு முகம் - கண்டு
காலம் பல வாழ்ந்திடுவீர் என்றிருந்த வேளைதனில் - காலன்
கவர்ந்தானோ அண்ணா இனி காண்போமா உங்கள் - கருணைமுகம்

இன்பங்கள் ஒன்றாய் கூடிவந்த வேளைதனில்
எங்களுடன் இன்புற்றிருப்பீர்கள்
என்றிருந்த வேளைதனில் விடையேதும் இன்றி கண்
கலங்கி நாம் நிற்க கடவுள் ஏன்தான் உங்களை
அழைத்தானோ அண்ணா உங்களை உருக்கி
எங்கள் பரம்பரையையே ஆளாக்கிய எங்கள்
ஒளிவிளக்கே அண்ணா எத்தனை ஆண்டு
சென்றாலும் உங்கள் நினைவுகளும் வழி நடத்தலும்
எமை விட்டு அகலாது அண்ணா.

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
சகோதர சகோதரிகள்

(10105)

### சிந்தனைக்கு

அதிகாரம் வளரவளர அதைத் தவறாகப் பயன்படுத்துவதில் உள்ள ஆபத்தும் வளர்கிறது

- எட்மண்ட் பர்க் -

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-11-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண் - 05


## அக்கறையற்ற அரசும் அதிகாரிகளும்

சுமார் மூன்று மாத காலமாக யாழ். மாவட்டத்திற்கு யார் அரசாங்க அதிபர் என்பது குழப்பமானதாகவே உள்ளது இதற்கு, சிறிலங்கா அரசாங்கத்தின் அக்கறையற்ற செயலா? அன்றி யாழ். அரச அதிகாரிகளின் அதிகார துஷ்பிரயோகம் காரணமா? இதில் எதுவாக இருப்பினும் இதனால் யாழ். மாவட்டத்தில் நெருக்கடிகள் அதிகரித்துள்ளன என்பதே இன்றுள்ள நிலையாகும்.

கடந்த சில மாதங்களாக யாழ். மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கு மாறிமாறித் தட்டுப்பாடுகள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன. கடந்த மாதத்தில் மாவிற்குப் பலத்த தட்டுப்பாடு இருந்தது. தற்பொழுது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மா கிடைக்கத் தொடங்கியிருப்பினும், சீனிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் பெருமளவில் அதிகரித்துச் செல்கின்றன. இதனால் மக்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்க வேண்டிய நிலையும் உருவாகியுள்ளது. பொதுவாகவே பொருளாதாரத் தடை, வேலைவாய்ப்பு இன்மை காரணமாக அல்லலுற்ற மக்கள், மாரிகாலத்தில் ஏற்பட்டுள்ள இத்தட்டுப்பாட்டினால் மேலும் சுமைகளை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலைக்கு சிறிலங்கா அரசாங்கம் எந்தளவு தூரம் காரணம் என்பது ஒருபுறம் இருக்க, யாழ். செயலக உயர் அதிகாரிகளின் அசட்டையீனங்கள் கணிசமான பங்கு ஆற்றுகின்றன. என்பதை மறுப்பதற்கு இல்லை.

யாழ். செயலகத்தைப் பொறுத்து மூன்று மாத காலமாக அரச அதிபர் கடமையில் இல்லை; தற்பொழுது யாழ். அரசாங்க அதிபர் யார் என்பதையே ஊகிக்க முடியாத நிலையே உள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் பதவி ஏற்றபோது புதிய அரசாங்க அதிபர் நியமனம் குறித்தும் பேச்சுக்கள் எழுந்தன. ஆனால் எவர் நியமிக்கப்பட்டார் என்பதை இன்னமும் உறுதிசெய்ய முடியாது உள்ளது. ஏனெனில் எவருமே இன்னமும் பதவி ஏற்றதாகத் தெரியவில்லை.

இதன் காரணமாக, சுமார் மூன்று மாத காலத்திற்கு முன்னர் கொழும்பு சென்ற யாழ் அரசாங்க அதிபர் இன்னமும் கடமையில் உள்ளாரா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. அரச அதிபரின் நடவடிக்கைகள் சில வேளை தான் அரச அதிபர் என்ற நிலையிலும், சில சமயம் அதற்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்ற ரீதியிலும் இருப்பதாக இதனுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஒரு வகையில் குழப்புகின்றன.

ஆனால், அரசாங்க அதிபர் பதவியில் உள்ளாரோ இல்லையோ யாழ். மாவட்டத்திற்குரிய சில நடவடிக்கைகளை, மேற்கொண்டுவருகின்றார்; இது அரச அதிபர் என்ற முறையிலா அன்றி தனிப்பட்ட ரீதியிலா என்பதை கூறமுடியாது விட்டாலும். யாழ். அரச அதிபர் என்ற பதவியின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற அநுகூலத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப் படுவதாக மட்டும் ஊகிக்க முடிகின்றது.

இந்நிலையானது அரசாங்க அதிபர் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்றார் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளதெனலாம். அரசாங்க அதிபர் பதவி துறந்திருப்பின் இது குறித்து எவரும் கேள்வி எழுப்புவதற்கு நியாயம் இருப்பதாக இல்லை; பதவியிலும் இருப்பதாக இல்லை பதவி துறந்ததாகவும் இல்லை; சுகவீனலீவில் இருப்பதாகக் கூறிக்கொண்டு காரியமாற்ற முற்படுகின்றமை அரசாங்கப்பதவியை அவர் தனது தனிப்பட்ட தேவைகேற்ப பயன் படுத்துவதாகவே கொள்ள இடமுண்டு. இல்லாது போனால், தனது பதவி விலகலை முன்னரே அறிவித்து ஏனையோர்களின் நடவடிக்கைகளுக்கு வழிவிட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு செயற்பட்டிருப்பின் யாழ். குடாநாட்டின் மாறிமாறி அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டிருக்க நியாயமில்லை; மாரிகாலம் தொடங்கும் முன்பே அதற்குரிய ஏற்பாட்டைச் செய்திருக்க முடியும் யாழ். செயலகம் இன்று அரச அதிபர் இன்றி செயலிழந்தது போன்ற தொரு ஸ்தம்பித நிலையை அடைந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்க மாட்டாது.

இந்த வகையில் இன்று யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றத்திற்கான காரணிகளில் யாழ். செயலக உயர் அதிகாரிகளின் பொறுப்பற்ற நடவடிக்கைகளே காரணமாகும் அதேசமயம் புதிய அரசாங்கமும் இவ்விடயத்தில் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இருப்பதும் ஆச்சரியப்படத்தக்க தொரு விடயம்; அரசாங்கம் அக்கறையாக இருப்பின் இவ்வாறானதொரு நிலை தொடரமுடியுமா?

## சமாதான நிலையை ஏற்படுத்தும் அரசின் முயற்சிகளில் பிரிட்டன் ஆர்வம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குமாகாணங்களில் சமாதான நிலையை ஏற்படுத்துவது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி அறிய பிரிட்டன் அரசு ஆர்வம் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது;

பிரிட்டனின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அமைப்பைச் சேர்ந்த துணை அமைச்சர் ரோனி பல்றி நேற்று கொழும்பு வந்துள்ளார்,

தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான இவர், கொழும்பில் வெளிநாட்டு அமைச்சர், வெளிநாட்டுப் பிரதி அமைச்சர், வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் போன்றோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார், நெருக்கடி நிலவும் பிரதேசங்களுக்கும் விஜயம்செய்யவுள்ள அவர் அங்குள்ள இராணுவ நிலையங்கள் பற்றிக் கேட்டு அறிவார்.

புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு பணிகளில் பிரிட்டனின் உதவி பயன்படுத்தப்படும் விதம் பற்றி நேரில் அறியவும் ரொனி பல்றி முயற்சிகளை மேற்கொள்வார்.

பிரிட்டன் வெளிநாட்டு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்து இருப்பது கடந்த இரண்டு ஆண்டுகளில் இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## இலவசமாக மூக்குக்கண்ணாடி

(தொல்புரம்)

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த கண்பார்வை குறைவானவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் திட்டமிட்டுள்ளனர்; கண்வைத்திய பரிசோதனை செய்தவர்களுக்கு மேற்குறித்த முன்னுரிமை அடிப்படையில் கண்ணாடிகளை வழங்கவுள்ளனர் எனத் தெரியவருகிறது. (41)

## யாழ். மாவட்டத்திற்கான சீனிக் கொள்வனவுகளில் மோசடி

யாழ் மாவட்டத்திற்காக அரசாங்க அதிபரினால் கொள்வனவு செய்யப்பட்ட சீனியில் நடைபெற்ற மோசடி ஒன்று தொடர்பாக பொறுப்பேற்க சீனியை வழங்கிய வர்த்தகர் மறுத்துள்ளார். இது விடயத்தில் இழப்பீட்டை வழங்கவும் அவர் மறுத்து விட்டார்.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் இங்கு கொண்டுவரப்பட்ட சீனியில் 213 மெற்றிக்தொன் சீனி குறைவாக இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டமை தெரிந்ததே, கொழும்பு சந்தையில் மொத்த விலைப்படி இதன் பெறுமதி சுமார் 58 லட்சம் ரூபாவாகும், என்பது குறிப்பிடத்தக்கது.

இது விடயம் தொடர்பாக கொழும்பில் தங்கியுள்ள யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இந்தச் சீனியை வழங்கிய கொழும்பு வர்த்தகரிடம் இது தொடர்பாக யாழ் அரசாங்க அதிபர், பேச்சு நடத்திய போது தான் சரியான எடையுடனேயே பொருட்களை அனுப்பியதாகவும், எடைக் குறைவுக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லையெனக் கைவிரித்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

மேலும் இக் கொள்வனவு தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எதையும் மேற்கொள்ள முடியாத இக்கட்டான நிலையில் யாழ் அரசாங்க அதிபர் இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஏனெனில் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை மட்டுமே கொள்வனவு செய்வதற்கு யாழ் அரசாங்க அதிபருக்கு அரசு அங்கீகாரம் அளித்து இருந்தது அதற்கும் மேற்பட்ட தொகையில் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் எதையும் யாழ் அரசாங்க அதிபர் பெற்றிருக்கவில்லை எனவும் அதனாலேயே சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் அரசாங்க அதிபர் இருப்பதாகவும் கூறப்படுகிறது

## அத்தியாவசிய பொருள் அனுப்புவதில் யாழ் செயலக அதிகாரி அசமந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண அரசாங்க செயலகத்திற்கு அத்தியாவசிய பொருள்களை ஏற்றி அனுப்பும் விடயத்தில் அசமந்த போக்கைக் காட்டும் யாழ் செயலக அரசாங்க அதிகாரி ஒருவர் கொழும்பில் தனியார் வர்த்தகர்களுக்கு கப்பல் வாடகைக்கு அமர்த்திக் கொடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன,

யாழ் மாவட்டத்திற்கு அத்தியாவசிய பொருட்களை அனுப்புவதில் எந்தவித அக்கறையும் செலுத்தாத இவர் கொழும்பில் சுமார் மூன்று மாதங்களுக்கும் மேலாக தங்கிநிற்பது குறிப்பிடத்தக்கது கொழும்பில் தம்மை சந்திப்பவர்களிடம் தான் லீவில் இருப்பதாகக் கூறிக் கொள்ளும் இவர் தனியாருக்கு பொருட்களை அனுப்புவதற்கு தேவையான பூர்வாங்க உதவிகளை பெரிய அளவில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது

இதேவேளை யாழ் மாவட்டத்திற்கு தேவையான பொருள்களை தனது அனுமதியின்றி அனுப்புவதற்கு அனுமதி வழங்க வேண்டாம் எனவும், அத்தியாவசிய ஆணையாளர் பகுதி மற்றும் நடவடிக்கைப் பணியகம் என்பனவற்றை அவர் கேட்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது:

இதேவேளையில் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் மேற்படி இடங்களில் தேக்கம் அடைந்து இருப்பதாகவும், இந்தநிலை தொடர்ந்தும் நீடிக்கக் கூடிய அபாயம் இருப்பதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் மேலும் கூறியுள்ளன.

## திணைக்கள பயிலுநர்கட்கு விரைவில் நிரந்தர நியமனம்

(நல்லூர்)

அரச திணைக்களங்களில் பயிலுனர்களாக கடமையாற்றும் இணைந்த சேவையைச் சேர்ந்தவர்களின் சேவை அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை நீடிக்கப்பட்டுள்ளது ஆனால் இவர்களின் சேவை ஒருவருடம் முடிவடைந்ததும் முன்னர் பெற்ற சம்பளத்திலும் குறைவான தோர் தொகையிலேயே அவர்கள் நிரந்தர நியமனம்பெறும் வரை வைக்கப்படுவார்கள். கல்வி அலுவலங்களில் பதவி உயர்வு பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் இப் பயிலுநர்கள் தமது சேவையில் திறமையுடன் உயர்வுபெற்றுச் செல்ல தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று கடந்த சனிக்கிழமை யாழ் கல்வித்திணைக்களத்தில் யாழ் கல்வித் திணைக்கள இணைந்தசேவை உத்தியோகத்தர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒன்றுகூடல் வைபவத்தில் சிறப்புரையாற்றும் போது யாழ் கல்வி வலயம் 1-ன் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்தார்.

யாழ் கல்வித்திணைக்கள கணக்காளர் ஆர்.சுகுணதிரன் தலைமையில் நடைபெற்றஇவ் வைபவத்தில் பொது எழுதுநர் சேவை 1-ற்குப் பதவி உயர்வு பெற்ற யாழ் கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கு பாராட்டு வைபவமும் நடைபெற்றது: இவ் வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய யாழ் கல்வி வலயம் 1-ன் கல்விப்பணிப்பாளர், யாழ் கல்வித்திணைக்களத்திலும் கல்விக் கோட்டங்களிலும் கடமையாற்ற இணைந்த சேவை உத்தியோகத்தர்கள் மிகவும் குறைந்த சம்பளத்திலேயே தமது கடமையை திறமையுடன் ஆற்றி வருகின்றார்கள். இவர்களுக்கு ஏனைய உத்தியோகத்தவர்கள் போன்று வேறு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதில்லை யாழ்ப்பாணத்தின் கல்வி வளர்ச்சிக்கும் ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கும் உழைத்து வரும் இவ் ஊழியர்கள் பொதுப்பரீட்சைகளில் தோற்றி மிக உயர்ந்த பதவிகளுக்குஉயரவேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய யாழ் கல்வித்திணைக்கள இணைந்த சேவைச் சங்க செயலாளர் ஆர். சுவாசா இங்கு கடமையாற்றும் எமது கணக்காளரும், யாழ் கல்வி வலயம் 1-ற்கான கல்விப்பணிப்பாளர் அவர்களும் விரைவில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்குப் பதவி உயர்வு பெற்றுச் செல்ல உள்ளார்கள்; அவர்கள் எம்மை விட்டு சென்றாலும் எமது ஊழியர்களின் உயர்வுக்கு தம்மாலான பங்களிப்பைச் செய்ய வேண்டும் கணக்காளர் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளராக செல்ல உள்ளார் என்றும் தெரிவித்தார். (17)

## தமிழர்களின் வீடுகளில் சிங்களவர்கள் குடியமர்வு

(மட்டக்களப்பு)

கல்குடா கிராமத்தில் தமிழர்களின் வீடுகளில் சிங்களவர்கள் குடி யேறியுள்ளனர். கல்குடா வலை வாடி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து போனதைத் தொடர்ந்து தென்பகுதியை சேர்ந்த சிங்களவர்கள் அவ் வீடுகளில் குடியேறியுள்ளனர்.

மேலும் கல்குடா கிராம அபிவிருத்தி சங்கக் கட்டிடத்திலும் சிங்களவர்கள் தங்கி இருப்பதால் நெசவு நிலையம் மூடப்பட்டிருப்பதுடன் பல யுவதிகளும் வேலை வாய்ப்பை இழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### யாழ்.பல்கலைக் கழகத்துக்கான

## பிரிட்டனின் அன்பளிப்புக்களை தென்பகுதிக்கு மாற்ற முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக கணனி, விஞ்ஞான, பௌதிக இரசாயன பகுதிகளை புனரமைப்பு செய்வதற்காக பிரிட்டன் அரசினால் அளிக்கப்பட்ட உதவியில் எஞ்சியிருக்கும் தொகையையும் தென்னிலங்கை பல்கலைக்கழகங்களுக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது இவ் உதவித் தொகையில் எண்பது சதவிகிதம் ஏற்கனவே தென் இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு மாற்றப்பட்டது தெரிந்ததே.

இந்திய இராணுவம் இங்கு நிலை கொண்டிருந்த காலப் பகுதியில் இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளால் மேற்படி பகுதிகள் சேதம் அடைந்திருந்தன அவற்றைப் புனரமைப்பு செய்வதற்காக பிரிட்டன் அரசு நாற்பது மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை அன்பளிப்பாக வழங்கி இருந்தது இவற்றில் எண்பது சதவிகிதமான பொருட்கள் ஏற்கனவே யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள நிலைமைகளைக் காரணம் காட்டி தென்னிலங்கை பல்கலைக்கழகங்களுக்கு மாற்றப்பட்டது தெரிந்ததே.

தற்சமயம் எஞ்சியுள்ள இருபது சதவிகிதமான 8 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களையும் அவ்வாறு மாற்றிப் பெற்றுக் கொள்வதற்கு பல்கலைக் கழகங்கள் மானிய ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (பா)

## மின் இணைப்பு திருத்த 87 லட்ச ரூபா தேவை

வலிகாமம் தெற்குப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு மீண்டும் மின்சாரம் வழங்குவதற்காக இராணுவ நடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்ட மின்சார லைன்கள், உபமின் நிலையங்கள் சேவைத்தொடர்புகள் ஆகியவற்றைத் திருத்துவதற்கு 87 லட்சம் ரூபா தேவைப்படும்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை விசேட ஆணையாளர் திரு. ஆ. மகாலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்; இந் நிதியை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

சுன்னாகம் உப அலுவலக எல்லைக்குட்பட்ட பிரதேசத்துக்கு 54 லட்சம் ரூபாவும், ஏழாலை உப அலுவலகப்பிரதேசத்திற்கு 19 லட்சம் ரூபாவும், உடுவில் உப அலுவலகத்துக்கு 14 லட்சம் ரூபாவும் தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்;

எனினும் சுன்னாகம் உப அலுவலகப் பிரதேசத்தைச் சேர்ந்த 1,640 பாவனையாளர்களுக்கும் ஏழாலை உப அலுவலகப் பிரதேசத்தைச் சேர்ந்த 866 பாவனையாளர்களுக்கும் உடுவில் உப அலுவலகப் பிரதேசத்தைச் சேர்ந்த 1,450 பாவனையாளர்களுக்கும் சிறிய திருத்தங்கள் செய்ததன் பின்னர் உடனடியாக மின்சாரம் வழங்க முடியும் என்றும் அவர் கூறினார். (24)

## தபால் திணைக்களத்திற்கு 9 கோடி ரூபாவரை நட்டம்

வடபகுதியில் யுத்தம் தொடங்கியதால் 90-ம் ஆண்டு முதல் இதுவரை யாழ்ப்பாண தபால் திணைக்களத்திற்கு ஒன்பது கோடி ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டிருப்பதாக அத்திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்;

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க இதுபற்றிய மதிப்பீடு ஒன்று ஏற்கனவே அனுப்பப்பட்டு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

இராணுவம், கடற்படை, ஷெல் தாக்குதல்கள் காரணமாக கட்டடங்கள், தளபாடங்கள் பெருமளவில் சேதம் அடைந்ததாலேயே இந்த நட்டம் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைகளுக்கு இடையே சங்கானையில் தாச்சிபோட்டி

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட தாச்சிப் போட்டியின்போது பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற முதலாம்சுற்றுப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட அணிகள் விபரம் வருமாறு-

13 வயதின் கீழ் ஆண்கள்: 1 ஆம் இடம் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம், 2 ஆம் இடம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம். 13 வயதின் கீழ் பெண்கள்: 1 ஆம் இடம் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம், 2 ஆம் இடம் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்.

ஆண்டு 4, 5 ஆண்கள்: 1 ஆம் இடம் பண்ணாகம் வடக்கு அ. மி. த. க. பாடசாலை 2 ஆம் இடம் மூளாய் அ. மி. த. க. பாடசாலை, ஆண்டு 4, 5 பெண்கள் 1 ஆம் இடம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் பண்ணாகம் வடக்கு அ. மி. த. க. பாடசாலை;

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 11. 15**
**செவ்வாய் இரவு**

8.01- ஊற்றும் ஒலி வாங்கி

8.10- அறிந்துகொள்ளுங்கள்- தகவற்களஞ்சியம்

8.20-நலந்தானா - நிகழ்ச்சியில குழந்தைகளுக்கு காய்ச்சலினால் ஏற்படும் வலிப்பு நோய்க்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்

8.30- செய்திகள்

8.40-சருத்துக்களம்- இ. இராஜேஸ்வரன் எழுதிய "உணர்வுகள்",

8.50-களமும் காலமும்- சி. கண்ணம்மா எழுதிய "அழியாத அலைகள் போல்"

9,00-மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

**1994. 11. 16**
**புதன் காலை**

7.02 மாவீரவணக்கம்

7.15-நீங்கள் கேட்டவை

7.30-செய்திகள்

7.35-பத்திரிகைச் செய்திகள்

7.40-நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

8.00-மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

# கிழக்கு கிராமங்கள் சுற்றிவளைப்பு 3 பெண்கள் மீது பாலியல் வன்முறை

## 20 க்கு மேற்பட்ட பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் புலிபாய்ந்தகல். 4 ம் முச்சந்தி முறாதுடை, கிண்ணையடி, வாழைச்சேனை ஆகிய முகாம்களில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் பிரம்படித்தீவு, முருங்கன்தீவு, தாரைவெளி ஆகியபகுதிகளைசுற்றிவளைத்து 20 பொதுமக்களைக் கைதுசெய்தும், மூன்று பெண்களை பாலியல் வன்முறைக்குள்ளாக்கியும் உள்ளனர். இச்சம்பவம் கடந்த 12-ம் திகதி இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட பொதுமக்கள் கிண்ணையடி முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அதே நேரம் புலிபாய்ந்தகல் முகாமிலிருந்தும், 4ம்முச்சந்தி முகாமிலிருந்தும் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களையும் இராணுவத்தினர் மேற்கொண்டவண்ணமிருந்தனர்.

இதேவேளை கடந்த வெள்ளியன்று கொக்கட்டிச்சோலை முகாம் அதிரடிப்படையினர் ஆலையடி முன்மாரி என்னுமிடத்தில் வைத்து ஒரு பொதுமகனை சுட்டுக் கொன்றனர்.

### உதைபந்தாட்டம

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகும்-

நெல்லியடி ம ம வித்தியாலய மைதானத்தில் 19 வயதுப் பிரிவு, நாவாந்துறை றோ.க. எதிர் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியும். 17 வயதுப் பிரிவு கலட்டி றோ.க. எதிர் புனித யோசப் ம.வி.யும் விளையாடும்-

யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் 17 வயதுப் பிரிவு ஹாட்லி எதிர் வட்டு. இந்துநாவுக்கரசு. 19 வயதுப் பிரிவு ஹாட்லி எதிர் இணுவில் மத்தியும், 17 வயதுப் பிரிவு ஸ்கந்தா எதிர் புனித ஹென்றியரசர் கல்லூரியும் விளையாடும்-

யாழ். இந்து மைதானத்தில் 15 வயதுப் பிரிவு புங்குடுதீவு ம.வி. எதிர் சண்டிலிப்பாய் இந்து ம.வி. யும், யாழ். இந்து எதிர் நாவற்குழி ம வி. யும் விளையாடும்-

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் 15 வயது முத்துத்தம்பி ம.வி. எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும், அராலி இந்து எதிர் அருணோதயாவும், சாவகச்சேரி இந்து எதிர் சோமஸ்கந்தாவும் விளையாடும்.

### சுவிஸ்

கப்பட்டுள்ளது இக் கூட்டத்தில் பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரியின் அவசிய தேவைகள் குறித்து அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் கூட்டத்தினருக்கு வாசித்துக் காட்டப்பட்டது

### ஜனாதிபதி

மர் சிறிமாவோ ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு அருகில் அமர்ந்திருக்க ஏனைய அமைச்சர்கள் பதவிப் பிரமாணங்களை செய்து கொண்டனர்.

இதேவேளைதிருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு எவ்வித அமைச்சுப்பொறுப்புக்களும் வழங்கப்படவில்லை.

பிரதமராக பதவியேற்க முன்னரும் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இலாகாப் பொறுப்பற்ற அமைச்சராகவே பணிபுரிந்தமை தெரிந்ததே.

# வெவ்வேறு சம்பவங்களில் 4 போராளிகள் வீரச்சாவு



லெப். சுமன்



லெப். சுவக்குமார் (சகாயம்)



லெப்.சிவலோகநாதன் (சத்தியா)



வீரவேங்கை தயாராஜ் (ரகு)

கடந்த பதினோராந் திகதி மாலை 4.30 மணியளவில், மட்டக்களப்பு மாவட்டம் கரவெட்டி என்னுமிடத்தில், இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரச்சாவடைந்த லெப். சுமன் (தில்லைநாயகன் சரவணபவான். அம்பாறை) என்னும் போராளிக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

★ ★

கடந்த பதினோராந் திகதி மாலை 6.30 மணியளவில், மட்டக்களப்பு மாவட்டத்தில் நீரில் மூழ்கியதில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரச்சாவடைந்த லெப். சுவக்குமார்/சகாயம் (ஆறுமுகம் ராசேந்திரன், மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்

★ ★

கடந்த ஒன்பதாம் திகதி காலை மட்டக்களப்பு மாவட்டம் ஆண்டாங்குளப் பிரதேசத்திலுள்ள வட்டக்கல் முகாம் இராணுவத்தினர் சுற்றி வளைப்பி லீடுபட்ட போது ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்

வீரச்சாவடைந்த இரண்டாம் லெப்.சிவலோகநாதன்/சத்தியா (நல்லதம்பி பரமேஸ்வரன், மட்டக்களப்பு) என்னும்போராளிக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

கடந்த பன்னிரண்டாந் திகதி காலை 7.45 மணியளவில், மட்டக்களப்பு மாவட்டம் பெண்டுகள்சேனை என்னும் இடத்தில் வைத்து இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவைத்தழுவிக்கொண்டார்

வீரச்சாவடைந்த வீரவேங்கை தயாராஜ்/ரகு (இலையதம்பி நவரட்ணம், மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்

### மாவீரர்

கள் எழுச்சிக்கோலம் பூண்டு வருகின்றன

வலிகாமம் கோட்டத்தில், சுன்னாகம் சந்தி, கொக்குவில் இந்துக்கல்லூரி, நல்லூர் ஆகிய இடங்களில் பெரியளவிலான மாவீரர் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன (சி)

# சமாதானம் இலங்கையர் விடயம்; புனர்வாழ்விற்கே பிரிட்டன் உதவும்

## பிரிட்டிஷ் வெளிவிவகார இணையமைச்சர்

(லண்டன்)

இலங்கையில் நடைபெறும் சமாதான முயற்சிகள் இலங்கையரை பொறுத்த விடயம் நாம் இதில் தலையிட முடியாது. ஆனால் எம்மால் முடியுமானால் அபிவிருத்தி, புனர்வாழ்வு உதவிகள் வழங்கவும் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்கவும் தயாராக உள்ளோம் என பிரிட்டிஷ் வெளியுறவு இணையமைச்சர் ரொனி பேர்டி தெரிவித்தார்.

அவர் கொழும்பு புறப்படுவதற்கு முன்பாக பி பி ஸி யின் தமிழ், சிங்கள சேவைகளுக்கு அளித்த பேட்டி ஒன்றில மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கான பிரிட்டனின் ஆயுத விற்பனை குறித்து கேட்டதற்கு ஒவ்வொரு நாட்டிற்கும் தன்னை பாதுகாத்துக்கொள்ள நியாயம் உண்டு- பாதுகாப்புத்துறை விற்பனைகள் மூலம் நாடுகளின் பாதுகாப்புத்துறை தேவைகளை பூர்த்தி செய்ய நாம் தயாராக உள்ளோம் என்பது உண்மை- ஆனால் பிரிட்டனின் ஆயுதங்கள் மனித உரிமை மீறலில் பயன்படுவதாக சந்தேகம் எழுந்தாலே ஆயுத விற்பனை நிறுத்தப்படும் என பிரிட்டிஷ் அமைச்சர் பதிலளித்தார்-

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அது ஏற்பட காரணம் பிரிட்டனின் காலனித்துவ ஆட்சியே என தமிழர் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுவது குறித்து கேட்கப்பட்ட போது, இலங்கைக்குள் சமாதான முயற்சியை ஏற்படுத்துவது இலங்கையர்களாகவே இருக்க வேண்டும்- சமாதான முயற்சி எப்படி அமைய வேண்டும் என நாம் இலங்கையருக்கு எடுத்துக் கூறினால் அது எமக்குள்ள திமிராக இலங்கை மக்களால் கருதப்படும் என்பதில் எமக்கு சந்தேகமில்லை என்றார்

அப்படியானால் இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் பிரிட்டனுக்கு தார்மீக கடமை இல்லையா? எனக் கேட்டதற்கு வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு அபிவிருத்தியில் இலங்கை அரசுக்கு உதவுவதில் எமக்குதார்மீக கடமை உள்ளதாக கருதுகிறேன்- ஆனால் சமாதான முயற்சியை இலங்கையர்களே தமக்குள் தீர்க்க வேண்டும் என்றார்-

முன்னைய சிறிலங்கா அரசின் தமிழ் அடக்கு முறைக்கு சார்பாக பிரிட்டன் தொடர்ந்து ஆயுத உதவி வழங்கியது குறித்து கேட்டபோது இவ் விடயத்தில் நாம் கவனமாக இருக்கிறோம்- எமது ஆயுதங்கள் பொது மக்கள் மீது பிரயோகிப்பதாக அறிந்ததால் ஆயுத விற்பனையை நிறுத்தியும் இருக்கிறோம் என்றும் பிரிட்டிஷ் வெளியுறவு இணையமைச்சர் கூறினார்.

### கலந்துரையாடல்

மாவீரர் நாள் தொடர்பாக, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரால் பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன

இன்று பிற்பகல் 1 30 மணிக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும், பிற்பகல் 1.30 மணிக்கு செங்குந்தா இந்துக் கல்லூரியிலும், பி ப 1 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும், முற்பகல் 8.20 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், பிற்பகல் 1 மணிககு அத்தியார் இந்துக் கல்லூரியிலும் கலந்துரையாடல்கள் நடைபெறும்.

# வட்டாரீதியாக இன்று எழுச்சிவார கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

வட்ட ரீதியாக மாவீரர் எழுச்சி வாரக் கூட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. இன்று இரவு 7-30 மணியளவில் இக் கூட்டங்கள் ஆரம்பமாகும்.

வலிகாமக் கோட்டத்தில், யாழ் வட்டத்தில் அத்தியடி சனசமூக நிலையம், அன்புமாறன் சனசமூக நிலையத்திலும், கோப்பாய் வட்டத்தில் புத்தூர் மாவீரர் மண்டபத்தடியிலும், புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்திலும், நல்லூர் வட்டத்தில் கொக்குவில் காந்திஜி சனசமூக நிலையத்திலும், மகமாரி சனசமூக நிலையத்திலும் நடைபெறும்.

தென்மராட்சிக் கோட்டத்தில் பளை வட்டத்தில் இன்று இரவு 7 மணியளவில் மாசார் பாடசாலைக் கண்மையிலும், கொடிகமம் வட்டத்தில் எழுதுமட்டுவாள் இளம்செல்வன் படிப்பகத்திலும், சாவகச்சேரி வட்டத்தில் கச்சாய் வீதி. முருகன் கோயிலிலும், கைதடி வட்டத்தில், கைதடி வடக்கு நவபுரம் அ. த. க. பாடசாலையிலும் நடைபெறும்-

தீவகக் கோட்டத்தில் இன்று இரவு 7-30 மணிக்கு பண்டிதர் குடியிருப்பிலும், லவனிதா குடியிருப்பிலும் கூட்டங்கள் நடைபெறும்.

### சிரமதானம

மாவீரர் வாரத்தை முன்னிட்டு வட்டரீதியாக சிரமதான வைபவங்கள் நடைபெற்று வருகின்றன. இன்று பின்வரும் இடங்களில் சிரமதான வைபவங்கள் நடைபெறும்;

சங்கானை வட்டத்தில் மூளாய் பித்தனை சுடலைப் பிட்டி பாதை அமைத்தலும், கோப்பாய் வட்டத்தில் புத்தூர் லோரன்ஸ் வீதி புனரமைத்தலும், சண்டிலிப்பாய் வட்டத்தில், இரட்டைப்புலம் பிள்ளையார் கோவிலருகில் உள்ள சிறுவீதி. பெரியவாய்க்கால் வெட்டலும், யாழ். வட்டத்தில் முலவைச்சந்தி அருள் மாதா சனசமூகநிலையத்தின் முன்பாகவுள்ள மைதானம், கழிவு வாய்க்கால் துப்புரவு செய்தலும், தீவகக் கோட்டத்தில், நாவற்குழி லவனிதா குடியிருப்பு, கெற்பலி பண்டிதர் குடியிருப்பு துப்புரவு செய்தல், தரவுகள் நிரப்புதல், வடிகால் செப்பனிடலும் நடைபெறும்.

மாணவர் அமைப்பினால், வலிகாமம் கோட்டத்தில், உடுவில் சந்தியிலும் நல்லூர் மாவீரர் தூபியிலும், சாவகச்சேரி கோட்டத்தில் சாவகச்சேரி வைத்திய சாலையிலும், கைதடிச் சந்தியிலும், பருத்தித்துறை கோட்டத்தில் மேஜர் ரஞ்சன் நினைவுத் தூபியிலும் இடம்பெறும்;

### சந்திரிகா

களை தற்காலிகமாகஒருவார காலத்திற்குஇடை நிறுத்தியது தொடர்பாக தாம அரசிற்கு அதிகார பூர்வமாக அறிவிக்கவில்லை எனவும். இது எமது நல்லெண்ண சமிக்கையைக் காட்டும் நடவடிக்கையாக மேற் கொள்ளப் பட்டுள்ளது என்றுந் தெரிவித்தனர்.

இதேசமயம் சமாதான முயற்சிகளுக்கு ஏதுவாகபோர் நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம், போக்குவரத்துப் பாதை திறப்பு என்பன வற்றை விடுதலைப் புலிகள் இயக்கம் வற்புறுத்தி வருவது தெரிந்ததே.

### நான்கு

கத்தின் தயாரிப்பில் உருவான அ. அன்ரனின் 'எல்லைக் கற்கள்' ஆகிய இரு வீடியோ ஒளிப்பட நாடாக்களும் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் உருவாக்கிய கடற் புலிகளின் வெளியீடான 'கடற் கரும்புலிகள்' 'கடலின் மடியில்' பாடல் ஒலிப்பதிவு நாடாக்களினதும் வெளியீட்டு விழாவே நாளை நடைபெறவுள்ளது.

விழாவின் இறுதியில் வீடியோ ஒளிநாடாக்கள் திரையிடப்படும் என தமிழீழ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழக நடுவப்பணியகம் தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் வேலுப் மயிலும்

வல்லிபுரம் வேலும்மயிலும் அகாலமரணமானார். இவர் வே இராசமாவின் அன்புக் கணவரும், மணிவண்ணன் (விஞ்ஞானபீடம் 3-ம் வருடம் யாழ். பல்கலைக் கழகம்), மணிமாறன் (முகாமைத்துவம் 1-ம் வருடம் யாழ். பல்கலைக் கழகம்), மணிவாமன் (A/L நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), பணிவதனன் (O/L வவுனியா மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவக்கொழுந்து, பர்வதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இவரின் ஈமக்கிரியைகள் புதன்கிழமை காலை 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. ஆனந்தராசா (மருமகன்)
உகிலியன் எல்லை அம்மன் வீதி,
வதிரி, நெல்லியடி,
(9754)

### திருமதி இராஜேஸ்வரி ஜெயப்பத்மலோசன்

சங்குவேலி, மானிப்பாயை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராஜேஸ்வரி ஜெயப்பத்மலோசன் 12-11-94 அன்று காலமானார். அன்னார் திரு. திருமதி சிவஞானம் அவர்களின் கனிஷ்ட புத்திரியும் ஜெயப்பத்மலோசனின் அன்பு மனைவியும், கல்யாணி, குமுதினி, இளங்கோவன் ஆகியோரின் அன்புத்தாயாரும், கந்தசாமியின் மருமகளும், சண்முகநாதன், காலஞ்சென்ற பரமேஸ்வரன், பாலேந்திரன், ஜெயலட்சுமி, விக்னேஸ்வரன், தெய்வேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சித்தா, புவனேஸ்வரி, சிவமலர், ஜெகநாதன் (உப தபால் அதிபர், சங்குவேலி) இந்திரா, குணலட்சுமி ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-11-94 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற பிப்லி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெயப்பத்மலோசன் (கணவர்)
சங்குவேலி,
மானிப்பாய்.
(சி-10710)


புதன்கிழமை வெளிவருகின்றது...
விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து வழங்கும் திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவான

**பிஞ்சுமனம்**

(முழுநீளவண்ணப்படம்)

படப்பிடிப்பு: எழிலன்
படத்தொகுப்பு: சேகர்
பாடல்கள்: புதுவை இரத்தினதுரை
இசை: ராஜன்ஸ் இசைக்குழு
கதை, திரைக்கதை, வசனம், இயக்குதல் ந. கேசவராஜன்
இது ஒரு திரைப்படப் பிரிவின் வெளியீடு

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும்

**எல்லைக்கற்கள்**

(முழுநீளவண்ணச்சித்திரம்)

திரைக்கதை, வசனம் நா. யோகேந்திரநாதன்
இசை மோ. சொலமன்ராஜ்
நெறியாள்கை அ. அன்ரன்
இது முற்றுமுழுதாகவே எழில் கொஞ்சும் மன்னாரின் வளங்களைக் கொண்டு உருவாக்கம் பெற்ற வண்ணச் சித்திரம்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய கடற்புலிகளின் வெளியீடான

**கடற்கரும்புலிகள்**

**கடலின் மடியில்**

(இரு பாடல் ஒலிப்பதிவு நாடாக்கள்)

இவை கடற் கரும்புலிகளினதும், கடற்புலிகளினதும் ஈகத்தையும் வீரத்தையும் கொண்டு உருவாக்கம் பெற்றவை

புதன்கிழமை பி. ப 4 மணிக்கு, யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் வெளியீட்டு விழாவோடு தமிழீழம் எங்கும் உலாவருகின்றன.
காணவும் கேட்கவும் தவறாதீர்கள்
(சி-10714)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது